சுருக்கம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் – திருப்பூர், தூத்துக்குடி, நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், புதுக்கோட்டை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, இராமநாதபுரம், மயிலாடுதுறை மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளாக தரம் உயர்த்துதல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண்.204 நாள்:31.12.2024

திருவள்ளுவர் ஆண்டு – 2055
ஸ்ரீ குரோதி வருடம், மார்கழி–16

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 23.11.2023.
2. மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.2020/2024/அ2, நாள்.20.12.2024.
3. மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடித ந.க.எண்.ஊநி1/2431/2024, நாள்.21.12.2024.
4. மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.ஒய்1/13296/2024, நாள்.20.12.2024
5. மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.926/2022/அ4 நாள்.21.12.2024.
6. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.5134/2023/அ4, நாள்.21.12.2024.
7. மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித ந.க.எண்.1500/2024/அ8, நாள்.21.12.2024.
8. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.2166/2023/அ1, நாள்.20.12.2024.
9. மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.5691/2023/அ7, நாள்.21.12.2024.
10. மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களின் கடித ந.க.எண்.05/2024/பே3, நாள்.21.12.2024.
11. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் கடித ந.க.எண்.3637/2021, நாள்.21.12.2024.
12. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் கடித ந.க.எண்.அ2/187/2022, நாள்.21.12.2024.
13. மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் கடித ந.க.எண்.ஊநி6/7428/2023, நாள்.21.12.2024.
14. மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்.2624/2023/பேரூ.3, நாள்.20.12.2024.

15. மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களின் கடித ந.க.எண்.1209/2024/அ7, நாள்.21.12.2024.

*****

**ஆணை:**

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021-22 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

"2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்தப் பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது."

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, அதாவது, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அருகருகே அமைந்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதன் மூலம் புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், எல்லைகளை விரிவாக்கம் செய்தல் போன்றவற்றை ஆய்வு செய்து தக்க செயற்குறிப்புகளை உருவாக்குதல், பரிந்துரைகளை அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவொன்றை அமைத்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேற்கண்ட உயர்நிலைக்குழு, பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகளை / விவாதங்களை மேற்கொண்டது. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின்

மறுசீரமைப்பு, புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம் தொடர்பாக, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை திறம்படவும், முழு அளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த அலுவலர்கள் போன்ற தொடர்புடைய அனைத்து தரப்பினரின் (Stakeholders) கோரிக்கைகள் / கருத்துகள் போன்றவை உயர்நிலைக் குழுவின் பல்வேறு கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டும், விவாதிக்கப்பட்டும் பல்வேறு தற்காலிக செயற்குறிப்புகள் (Tentative Proposals) உருவாக்கப்பட்டன.

4. மேலும், இப்பொருள் தொடர்பான பல்வேறு பொருண்மைகள் குறித்து உயர்நிலைக் குழுவால் 18.12.2024 அன்று காணொளி வாயிலாக 28 மாவட்ட ஆட்சியர்களுடன் இறுதி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

5. அதனடிப்படையில், திருப்பூர், தூத்துக்குடி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், புதுக்கோட்டை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 21 கிராம ஊராட்சிகளை 21 பேரூராட்சிகளாக தரம் உயர்த்துவது குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

6. மேலும், நாமக்கல், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் உள்ள 8 கிராம ஊராட்சிகளை ஒன்றிணைத்து 4 பேரூராட்சிகளாக தரம் உயர்த்துவது குறித்தும் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

7. கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது தொடர்பாக பின்வரும் முக்கிய காரணங்களால் முடிவு செய்யப்படுகிறது:

(அ) பெரும்பாலான ஊரகப்பகுதிகள் நகர்ப்புரப் பகுதிகளுக்கு இணையான வளர்ச்சியை அடைந்து வருகின்றன. எனவே, இத்தகைய ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது / சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.

(ஆ) வேகமாக நகரமயமாகிவரும் / வளர்ச்சியடைந்துவரும் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்குத் தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி / இடப்பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல், மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள் / சேவைகளின் விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்குத் தேவைப்படும் பொறியாளர்கள் உள்ளிட்ட பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளது போன்றவற்றைக் களையவும் (to overcome) பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துதல் அவசியமாகிறது.

(இ) கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவதால், அப்பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்கும். இந்த மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்துத் தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

8. இந்நிலையில், அரசு, மேலே 2 முதல் 15 வரையில் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் செயற்குறிப்பினை கவனமாகப் பரிசீலித்து பின்வரும் அட்டவணைகளில் உள்ளவாறு கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளாக அமைத்துருவாக்கலாமென உத்தேச முடிவு மேற்கொண்டு, அவ்வாறே ஆணையிடுகிறது:

<u>அட்டவணை- I</u>

| வ. எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட வேண்டிய ஊராட்சியின் பெயர் | மக்கள் தொகை | தரம் உயர்த்துவதற்கான முக்கியத்துவம் / காரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஈரோடு | சென்னிமலை | **முகாசிபிடாரியூர்** | 14143 | வேகமாக நகரமயமாக்கலை நோக்கி நகரும் ஊராட்சி மற்றும் ஊரக பகுதிக்கான தன்மை மிகவும் குறைவாக உள்ள நிலை (விலை நிலங்கள் 7 சதவீதம் மட்டுமே). எனவே, பேரூராட்சியாக தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 2 | கோயம்புத்தூர் | சூலூர் | **கணியூர்** | 12011 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாக தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 3 | | | **அரசூர்** | 11510 | |
| 4 | | தொண்டாமுத்தூர் | **பேரூர் செட்டிபாளையம்** | 17809 | |
| 5 | திருவள்ளூர் | மீஞ்சூர் | **அத்திப்பட்டு** | 11034 | |
| 6 | | சோழவரம் | **பாடியநல்லூர்** (பாடியநல்லூர் மற்றும் நல்லூர்) | 43414 | |
| 7 | புதுக்கோட்டை | விராலிமலை | **விராலிமலை** | 10883 | ஊராட்சியின் மக்கள் தொகையானது 85 சதவீதம் உயர்ந்துள்ளது. அதனடிப்படையில், குடியிருப்புக் கட்டடங்கள் 104 சதவீதம் உயர்ந்துள்ளது. மேலும், தேசிய நெடுஞ் சாலையின் அருகில் அமைந்துள்ளதால் நகர்ப்புர வளர்ச்சி பண்புகளைக் கொண்டு வேகமாக வளர்ந்து வருகிறது. எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 8 | சிவகங்கை | காளையார்கோவில் | **காளையார்கோவில்** (உட்கடை கிராமங்களான காளையார்கோவில், மாந்தாளி, மேட்டுப்பட்டி, ஊத்துப்பட்டி, சீக்கவரனி) | 33082 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 9 | சேலம் | ஏற்காடு | **ஏற்காடு** | 11582 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 10 | | தலைவாசல் | **மணிவிழுந்தான்** | 12115 | |
| 11 | கிருஷ்ணகிரி | ஓசூர் | **பாகலூர்** (பாகலூர் மற்றும் பெலத்தூர் கிராமத்திலுள்ள சூடாபுரம் குடியிருப்புப் பகுதி ) | 23024 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |

## அட்டவணை– II

| வ. எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட வேண்டிய ஊராட்சியின் பெயர் | மக்கள் தொகை | தரம் உயர்த்துவதற்கான முக்கியத்துவம் / காரணம் |
|---|---|---|---|---|---|
| 1, | கோயம்புத்தூர் | சூலூர் | பட்டணம் | 9196 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 2 | தருமபுரி | பென்னகரம் | கூத்தப்பாடி | 12859 | |
| 3 | கிருஷ்ணகிரி | கெலமங்கலம் | ராயக்கோட்டை | 14088. | |
| 4 | | சூளகிரி | சூளகிரி | 9530 | |
| 5 | புதுக்கோட்டை | திருமயம் | திருமயம் | 6890 | ஊராட்சி மக்கள் தொகையானது 123 சதவீதம் உயர்ந்துள்ளது. அதனடிப்படையில் குடியிருப்புக் கட்டடம் 95 சதவீதம் உயர்ந்துள்ளது. மேலும், சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ளதால் மிக வேகமான நகர்ப்புர வளர்ச்சிப்பணிகளை கொண்டுள்ளது. எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 6 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | தேவிபட்டிணம் | 11599 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 7 | | கடலாடி | ஏர்வாடி | 13366 | |
| 8 | சேலம் | தலைவாசல் | தலைவாசல் | 7998 | |
| 9 | தூத்துக்குடி | ஓட்டப்பிடாரம் | புதியம்புத்தூர் | 8012 | உள்ளூர் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் செய்யப்படும் குழந்தைகளுக்கான பிரத்தியேக ஆடை உற்பத்தி (Garments) நிலையம், அதிகரிக்கும் மக்கள் தொகை. எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 10 | திருச்சிராப்பள்ளி | மணச்சநல்லூர் | இருங்களூர் | 9367 | 10000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகள், வளர்ந்து வரும் ஊராட்சிகள். குடியிருப்பு பகுதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் விளை நிலங்களின் அளவு குறைந்து கொண்டே வருதல். எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 11 | திருப்பூர் | காங்கேயம் | நத்தக்காடையூர் | 8019 | கிராம ஊராட்சிப் பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு செய்வதற்கும், திட்டமிட்ட வளர்ச்சிக்கும் ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் பொது மக்களின் வளர்ச்சிக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும். எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 12 | திருவள்ளூர் | கடம்பத்தூர் | கடம்பத்தூர் | 11235 | நகர்ப்புர பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |
| 13 | மயிலாடுதுறை | கொள்ளிடம் | கொள்ளிடம் [ஆணைக்காரன் சத்திரம் (வார்டு 1 முதல் 15 வரை – வார்டு எண்.3 தவிர) மற்றும் கோபாலசமுத்திரம் ஊராட்சி (வார்டு 1 முதல் 10 வரை–வார்டு 11 மற்றும் 12ஐ தவிர)] | 18780 | |
| 14 | நாமக்கல் | திருச்செங்கோடு | தோக்கவாடி (தோக்கவாடி, வரகூராம்பட்டி) | 20004 | அனைத்து ஊராட்சிகளும் நகர்ப்புரபகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளன. மேலும், அதிகரித்துக் கொண்டே வரும் குடியிருப்புகளின் எண்ணிக்கை. எனவே, பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவது அவசியமாகிறது. |

9. இதனடிப்படையில், மேலே பத்தி 8-ல் உள்ள அட்டவணை–I–ல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்புகளைப் பொறுத்தளவில், 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பிரிவு 3 (1) (a)–ன் கீழும், அட்டவணை–II–ல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்புகளைப் பொறுத்தளவில்,

மேற்படி சட்டத்தின் 3(1–A)–ன் கீழும் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 31.12.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**10.** இதனடிப்படையில் உத்தேச புதிய பேரூராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, பேரூராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தா. கார்த்திகேயன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்:–**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 001.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை–600 028.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–600 028.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 015.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 009.
சட்டத்துறை, சென்னை–600 009.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–600 106.
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம், சென்னை–600 106.
அரசு முதன்மைச் செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை–600 009.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

31.12.24
**பிரிவு அலுவலர்**
31/12/24

## APPENDIX

## NOTIFICATION-I

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the entire local areas specified in column (4) of the Table below as Town Panchayats:-

### THE TABLE

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | Coimbatore | Sulur | Kaniyur Village Panchayat |
| 2 | | | Arasur Village Panchayat |
| 3 | | Thondamuthur | Perur Chettipalayam Village Panchayat |
| 4 | Erode | Chennimalai | Mukasipidariyur Village Panchayat |
| 5 | Pudukottai | Viralimalai | Viralimalai Village Panchayat |
| 6 | Salem | Yercaud | Yercaud Village Panchayat |
| 7 | | Thalaivasal | Manivilundan Village Panchayat |
| 8 | Sivagangai | Kalayarkoyil | Kalayarkoil Village Panchayat |
| 9 | Tiruvallur | Minjur | Athipattu Village Panchayat |

Based on the above constitution, wards will be divided for the next General election.

**2.** Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

**SECTION OFFICER**

31/12/24 31.12.24

## NOTIFICATION- II

In exercise of the powers conferred by sub-section (1-A) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu having regard to the economic, historic or touristic importance, hereby declares his intention to constitute the entire local areas specified in column (4) of the Table below as Town Panchayat:-

### THE TABLE

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | Coimbatore | Sulur | Pattanam Village Panchayat |
| 2. | Dharmapuri | Pennagaram | Koothapadi Village Panchayat |
| 3. | Krishnagiri | Kelamangalam | Rayakottai Village Panchayat |
| 4. | | Shoolagiri | Shoolagiri Village Panchayat |
| 5. | Pudukottai | Thirumayam | Tirumayam Village Panchayat |
| 6. | Ramanathapuram | Kadaladi | Ervadi Village Panchayat |
| 7. | | Ramanathapuram | Devipattinam Village Panchayat |
| 8. | Salem | Thalaivasal | Talaivasal Village Panchayat |
| 9. | Thoothukudi | Ottapidaram | Pudiyamputhur Village Panchayat |
| 10. | Tiruchirappalli | Manachanallur | Irungalur Village Panchayat |
| 11. | Tiruppur | Kangeyam | Nathakadaiyur Village Panchayat |
| 12. | Tiruvallur | Kadambathur | Kadambathur Village Panchayat |

Based on the above constitution, wards will be divided for the next General election.

**2.** Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

**SECTION OFFICER**

31.12.24

31/12/24

## NOTIFICATION-III

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intention to constitute the local areas specified in column (4) of the Table below as Town Panchayat specified in column (5) thereof: -

**THE TABLE**

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area | Name of Town Panchayat |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | Krishnagiri | Hosur | Bagalur Village Panchayat (Full) | Bagalur |
| 2. | | | Soodapuram Part in Belathur Village Panchayat | |
| 3. | Tiruvallur | Sholavaram | Padiyanallur Village Panchayat | Padiyanallur |
| 4. | | | Nallur Village Panchayat | |

Based on the above constitution, wards will be divided for the next General election.

**2.** Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

K.
**SECTION OFFICER**
31.12.24

31/12/24

## NOTIFICATION- IV

In exercise of the powers conferred by sub-section (1-A) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu, having regard to the economic or historic importance, hereby declares his intention to constitute the local areas specified in column (4) of the Table below, as Town Panchayat, as specified in column (5) thereof:-

**THE TABLE**

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area | Name of Town Panchayat |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | Mayiladuthurai | Kollidam | Anaikkaranchattaram Village Panchayat (Except Ward No. 3) | Kollidam |
| | | | Gopalasamudram Village Panchayat (Except Ward No.11 and 12) | |
| 2. | Namakkal | Tiruchengodu | Thokkavadi Village Panchayat (Full) | Thokkavadi |
| | | | Varagoorampatty Village Panchayat (Full) | |

Based on the above constitution, wards will be divided for the next General election.

**2.** Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification, may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

K.

**SECTION OFFICER**

31.12.24

31/12/24